மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் - 9. நாள்: 09.06.2020.

ந.க.அ1/3435/2020

சுற்றறிக்கை

பொருள்: பொதுப்பணி - வேலூர் மாவட்டம் - COVID-19 / கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு நடவடிக்கை - வேலூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வரும் அனைத்து துறை அரசு அலுவலர்களும் அலுவலகத்தில் சமூக இடைவெளி கடைபிக்க மற்றும் வேலூர் மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு / பிற மாநிலங்களுக்கு செல்ல முன் அனுமதி பெற்று செல்ல அறிவுறுத்துதல் - தொடர்பாக.

பார்வை: தொடர்புடைய ஆவணங்கள்.

*********

COVID-19 / கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும், இவ்வைரஸ் சில பகுதிகளில் வேகமாக பரவி வருகிறது. எனவே, வேலூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வரும் அனைத்து துறை அரசு அலுவலர்களும் அலுவலகத்தில் முகக்கவசம் அணிவதையும், அவ்வப்போது கைகளை கழுவுவதையும் சம்மந்தப்பட்ட அலுவலக தலைவர்கள் உறுதி செய்துக்கொள்ள வேண்டும். அனைத்து அலுவலகங்களிலும், பணியாளர்களுக்குத் தேவையான முகக்கவசங்கள், சோப்புகள், கைகழுவும் திரவம் போன்றவை இருப்பில் உள்ளதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும். அலுவலகத்திற்குள் சமூக இடைவெளியுடன் அலுவலர்கள் பணியாற்றுவதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும். அலுவலக ஊழியர்கள் அனைவரும் அலுவலக அடையாள அட்டையினை கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்.

2) பொதுமக்களை அலுவலகத்திற்குள் அனுமதிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் தங்களது மனுக்களை வெளியில் உள்ள பெட்டியில் இட்டுச்செல்ல அறிவுறுத்த வேண்டும். மேலும், அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலருக்கோ அல்லது அவருடைய வீட்டில் உள்ள அவரின் உறவினர்களுக்கோ கடுமையான சளி / காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏதுமிருப்பின் அவர் அலுவலக தலைவருக்கு முறையாக தகவல் அளித்து விடுப்பு துய்க்கவும், முறையாக பரிசோதனை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

3) இப்பேரிடர் சூழ்நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வேலூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வரும் அனைத்து துறை அரசு அலுவலர்களும் அத்தியாவசிய / அவசர தேவையின்றி தலைமையிடத்தைவிட்டு செல்வது முற்றிலும் தடைசெய்யப்படுகிறது. மேலும், அத்தியாவசிய / அவசர தேவையின்றி வேலூர் மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களுக்கோ அல்லது பிற மாநிலங்களுக்கோ செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. அத்தியாவசிய /

அவசர தேவையின் காரணமாக வேலூர் மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களுக்கோ அல்லது பிற மாநிலங்களுக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலையில் அனைத்து நிலை அலுவலர்களும் தங்கள் பணிபுரியும் அலுவலகத்தின் அலுவலக தலைவர் மூலமாக வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து முறையாக முன் அனுமதி பெற்று செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்/-ஜெ.பார்த்தீபன்,
மாவட்ட ஆட்சியர் (பொ) /
மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

/உத்தரவுபடி/

மாவட்ட ஆட்சியருக்காக,
வேலூர் - 9.

10/06/2020

பெறுநர்
அனைத்து துறை அலுவலக தலைவர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்: மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியாளர் /
மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர்.
நகல்: அ1 இருக்கைக்கு.